**80 Betty Cuthbert Drive, Lidcombe**

**சுகாதாரம், கல்வி மற்றும் குடியிருப்பு பயன்பாடுகளை தளத்தில் செய்வதற்கான அனுமதி வேண்டி திட்டமிடல் முன்மொழிவு**

80 Betty Cuthbert Drive, Lidcombe-ல், ஒரு **திட்டமிடல் முன்மொழிவு** (ரிசோனிங்) பற்றிய கூடுதல் ஆலோசனையை கம்பலாந்து நகர சபை மேற்கொண்டு வருகிறது. நீங்களும் உங்களுடைய கருத்துக்களை வழங்கும்படி **நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்**.

எதிர்காலத்தில் சுகாதாரம், கல்வி மற்றும் குடியிருப்பு பயன்பாடுகளை தளத்தில் செய்யும் வகையில் தளத்தில் உள்ள **திட்டமிடல் கட்டுப்பாட்டை** மாற்ற வேண்டும் என்று முன்மொழிவு கூறுகிறது. இவற்றுள் அடங்குபவை:

- தளத்தின் தெற்குப் பக்கத்தில் MS வசதியை மாற்றி அமைப்பது. தற்போதைய **திட்டமிடல் கட்டுப்பாடுகளின்** அடிப்படையில், இடமாற்றப்பட்ட வசதிக்கான மேம்பாட்டு விண்ணப்பம் நவம்பர் 2021-ல் சிட்னி சென்ட்ரல் சிட்டி பிளானிங் பேனலால் அங்கீகரிக்கப்பட்டது.
- இப்பகுதியில் ஏற்பட்டுள்ள மக்கள்தொகை வளர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் தளத்தில் ஒரு புதிய பள்ளிக்கான நிலம். பள்ளியை கட்டியெழுப்ப இந்த சமயத்தில் NSW அரசு எந்த உறுதியும் அளிக்கவில்லை.
- நடுத்தர அடர்த்தி வீடுகள், ஏற்கனவே பொட்டானிகாவில் உள்ள வீடுகளைப் போன்றது. இந்த முன்மொழிவின் கீழ் 85 குடியிருப்புகள்வரை கட்டப்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தளத்தின் எதிர்கால மேம்பாட்டிற்கு ஆதரவாக முன்மொழியப்பட்ட மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டுள்ளது. தளத்தின் பயன்பாடு (ஸோனிங்), உயரம் மற்றும் அடர்த்தியை மாற்றுவதற்கு கம்பலாந்து உள்ளூர் சுற்றுச்சூழல் திட்டத்தில் ஒரு திருத்தம், தளத்தில் எதிர்கால மேம்பாட்டுக்காக வழிகாட்ட கம்பலாந்து**மேம்பாட்டு** கட்டுப்பாட்டுத் திட்டத்தில் ஒரு திருத்தம் ஆகியவை நடப்பு **திட்டமிடல்** கட்டுப்பாட்டில் உள்ள மாற்றங்களில் அடங்கும்.

வரும் செப்டம்பர் 6, 2022 முதல் அக்டோபர் 5, 2022-வரை இந்த திட்டமிடல் முன்மொழிவு பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கும்படி **சபை** தெரிவித்துக் கொள்கிறது. கூடுதல் தகவல்களுக்கும், நீங்கள் உங்களுடைய கருத்துக்களை எப்படித் தெரிவிக்கலாம் என்பதைப் பற்றியும் தெரிந்துகொள்ள https://haveyoursay.cumberland.nsw.gov.au/betty-cuthbert-drive என்ற வலைதளத்திலோ அல்லது 8757 9000-க்கு அழைத்து **சபையைத்** தொடர்பு கொள்ளலாம்.

